தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.068244/எம்/இ2/2019, நாள். 05 .12.2019

பொருள்: பள்ளிக்கல்வி– செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்– 2020 பிப்ரவரி 7–ஆம் நாளில் "தமிழ் அகராதியியல் நாள்" நிறைவு விழா கொண்டாடுதல் – பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் போட்டிகள் நடத்துதல்– மாணவர்களின் பெயர் மற்றும பள்ளி விவரங்களை அனுப்பப் கோரியது– உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை: சென்னை–113, செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம், இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.331/2019, நாள்.22.11.2019

******

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் , தமிழ் ஆட்சி மொழி , தமிழ் பண்பாடு (ம) தொல்லியல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஆண்டு தோறும் நவம்பர் 8 மற்றும் 9 ஆம் நாட்களில் "தமிழ் அகராதியியல் நாள்" கொண்டாடப்படும் என்றும் , இந்நாளையொட்டி பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் கலைச் சொல்லாக்கப் போட்டியும், அகராதியியல் தொடர்பான பொருண்மையில் ' சொல்– பொருள் – படம் ' என்கிற வகையில் ஓவியப்போட்டியும் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்கேதுவாக மாவட்டத்திற்கு இரண்டு மாணவர்கள் வீதம் (ஒரு போட்டிக்கு ஒருவர்) தேர்வு செய்து அவர்களின் பெயர் மற்றும் பள்ளி விவரங்களை இணைப்பில் கண்ட படிவத்தில் பூர்த்தி செய்து dir.dtedp@tn.gov.in மற்றும் jdnsed@nic.in ஆகிய மின்னஞ்சல் முகவரிக்கு 31.12.2019 -க்குள் அனுப்பி வைக்கும்படியும் இப்பொருள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வையில் கண்ட கடிதம் மற்றும் படிவம்

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

நகல்

த.காமராசு,

இயக்குநர்

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்,

தரமணி, சென்னை–600 113

068244/M.

2
25.11.19.

தொலைபேசி: (அலு.) 22541209

SD(NSS)

# செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

------

25/11/19

அனுப்புநர் :

த. காமராசு
இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம்,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை – 600 113.

பெறுநர் :

**இயக்குநர்**
பள்ளிக் கல்வி இயக்ககம்,
கல்லூரிச் சாலை,
சென்னை – **600 006.**

---

**ந.க.எண். 331/2019, நாள் : 22–11–2019**

திருவள்ளுவர் ஆண்டு 2050, விகாரி / கார்த்திகை – 6

அய்யா,

பொருள் : **2019–2020–**ஆம் ஆண்டிற்கான சட்டப் பேரவை அறிவிப்பு – செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் – 2020 பிப்ரவரி 7–ஆம் நாளில் ‘**தமிழ் அகராதியியல் நாள்**’ நிறைவு விழாக் கொண்டாடுதல் – பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் போட்டிகள் நடத்துதல் – மாணவர்களின் பெயர் மற்றும் பள்ளி விவரங்களை அனுப்பக் கோருதல் – தொடர்பாக.

பார்வை :

1) 2019–2020–ஆம் ஆண்டுக்கான சட்டப் பேரவை அறிவிப்பு நாள் **18.06.2019.**
2) தமிழ்வளர்ச்சி (ம) செய்தி (த.வ.2–2)த்துறை, அரசாணை (நிலை) எண். 139, நாள் **05.11.2019.**

------

பார்வையில் காணும் அறிவிப்பில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் ஆண்டுதோறும் நவம்பர் 8,9–ஆம் நாள்களில் ‘**தமிழ் அகராதியியல் நாள்**’ கொண்டாடப்படும் என்று தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2) தமிழ் அகராதியியல் நாளையொட்டி பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் கலைச்சொல்லாக்கப் போட்டியும், அகராதியியல் தொடர்பான பொருண்மையில் ‘**சொல்–பொருள்–படம்**’ என்கிற வகையில் ஓவியப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

..2..

**ஓவியப்போட்டி:**

ஓவியப்போட்டி என்பது மாணவர்களிடையே தமிழ்ச் சொற்கள் அறிதலையும் அவற்றிற்கான பொருள்புரிதலையும் ஏற்படுத்தி, கொடுக்கப்படும் சொற்களின் பொருளறிந்து அதற்கேற்ற படம் வரைவதன் மூலம் அவர்களின் ஓவியத்திறனையும் ஊக்குவிப்பதாக அமையும்.

(எ.டு)

‘**களிறு**’ என்று கொடுக்கப்பட்டால் ‘**ஆண் யானை**’ என்று பொருளறிந்து படம் வரைய வேண்டும்.

‘**அரிமா**’ என்று கொடுக்கப்பட்டால் ‘**சிங்கம்**’ என்று பொருளறிந்து படம் வரைய வேண்டும்.

**கலைச்சொல்லாக்கப் போட்டி:**

கலைச்சொல்லாக்கப் போட்டி என்பது மாணவர்களிடையே ஆங்கிலச் சொற்ளுக்கு இணையான புதிய தமிழ்ச் சொற்களை வடிவமைக்கும் ஆற்றலை வளர்த்தெடுப்பதாய் அமையும்.

(எ.டு)

| | | |
|---|---|---|
| Whats app | : | புலனம் / கட்செவி |
| Smart phone | : | திறன்பேசி |
| Pen drive | : | பதிவுகோல் / குறும்பதிவி |
| Selfie | : | தாமி |

3) மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்கேதுவாக மாவட்டத்திற்கு இரண்டு மாணவர்கள் வீதம் (ஒரு போட்டிக்கு ஒருவர்) தேர்வு செய்து அவர்களின் பெயர் (ம) பள்ளி விவரங்களை **07.01.2020**ஆம் நாளுக்குள் இவ்வியக்ககத்திற்கு அனுப்பிவைக்க ஆவன செய்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

4) ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதற் பரிசாக **ரூ.10,000/–** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்), இரண்டாயிரம் பரிசாக **ரூ.5,000/–** (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

5) இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு **044–22541209** என்ற எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இயக்குநர்**

25/11/2019.

படிவம்

மாவட்டத்தின் பெயர்:

| போட்டிகள் | கலந்துகொள்ளும் மாணவர்/மாணவியின் பெயர் மற்றும் பயிலும் வகுப்பு | பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | மாணவரின் பெற்றோர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியரின் அலைபேசி எண். |
|---|---|---|---|
| ஓவியப்போட்டி (ஒரு நபர் மட்டும்) | | | |
| கலைச் சொல்லாக்கப் போட்டி (ஒரு நபர் மட்டும்) | | | |

மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்